www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsl12T

தென்காசி மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு 2022

வகுப்பு 12

பொதுத்தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்:
1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்க்கவும்.
2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு: விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14×1=14

1) பொருத்துக.

| | |
|---|---|
| அ) தமிழ் அழகியல் | 1) பரலி. சு. நெல்லையப்பர் |
| ஆ) நிலவுப்பூ | 2) தி.சு. நடராசன் |
| இ) கிடை | 3) சிற்பி பாலசுப்பிரமணியம் |
| ஈ) உய்யும் வழி | 4) கி.ராஜநாராயணன் |

அ) 4 3 2 1 ஆ) 1 4 2 3 இ) 2 4 1 3 ஈ) 2 3 4 1

2) தமிழில் திணைப்பாகுபாடு ............ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு
இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

3) நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்பமாதவன் குறிப்பிடுவது
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழைமேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

4) 'உவாஉற வந்து கூடும் உடுபதி, இரவி ஒத்தார்' - யார், யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன்
இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

5) வெண்பாவுக்குரிய தளை
அ) மாமுன் நேர் ஆ) மாமுன் நிரை இ) காய்முன் நிரை ஈ) கனிமுன் நேர்

6) சரதா நடத்திய இதழ்
அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

7) எதை அன்றே மறப்பது நன்று
அ) தினைத்துணை நன்றியை ஆ) பனைத்துணை நன்றியை
இ) நன்றல்லதை ஈ) காலத்தினால் செய்த நன்றியை

8) 'காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை' இத்தொடரில் 'கலன்' உணர்த்துவது
அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி
இ) இசைக்கருவி ஈ) வேளாண்கருவி

9) தென்னிந்தியாவின் 'நுழைவு வாயில்' எனப்படுவது
அ) கல்கத்தா ஆ) புதுதில்லி இ) சென்னை ஈ) மும்பை

10) 'விளியறிஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

11) 'படிமம்' என்பதன் பொருள்
அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

12) வேறுபட்டதைக் குறிப்பிடுக.
அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

13) அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ் நதி கடக்கச் சொல்வது
அ) கடந்த கால துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை
இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்

14) ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்
அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்துவமும் தமிழும்

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsi12T

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3×2=6

15) நிலத்தை ஏன் காக்க வேண்டும்?

16) எத்திசையிலும் சோறு தட்டாது கிடைக்கும் - யாருக்கு?

17) பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர் - தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.

18) மூச்சு நின்று விட்டால் பேச்சும் அடங்கும் - கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×2=4

19) மொழியின் இயல்பு வழக்குகளைக் கலை வழக்குகளாக மாற்றுபவை எவை?

20) குடும்பம் என்னும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படையாக இருப்பது எது?

21) 'தமிழர்கள் வளர்த்த அழகுக்கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

### பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7×2=14

22) பொருள் வேறுபாடறிந்து தொடரமைக்க
கான் - காண்

23) தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்

24) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது

25) சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க
பலகை (அல்லது) கோவில்

26) தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரடப்படுகின்றன.

27) ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) அறுத்து ஆ) கண்டான்

28) ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) முன்னுடை ஆ) பூம்பாவாய்

29) கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க
முன் (அல்லது) தானே

30) கலைச்சொல்லாக்கம் தருக.
அ) Mobile Banking ஆ) Biography

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8

31) 'தன்னேர் இலாத தமிழ்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32) சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

33) வள்ளலார் கந்த கோட்டத்து இறைவனிடம் வேண்டுவதை தெய்வமணிமாலை பாடல் வழி விளக்குக.

34) நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2×4=8

35) இன்றைய கூட்டுக் குடும்பம், பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே - விளக்குக.

36) சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

37) மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

38) வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

Tsl12T



## பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. **3x4=12**

39) உவமையணியைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40) இலக்கிய நயம் பாராட்டுக (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரோ - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

- கவிமணி தேசிக விநாயகம்

41) பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) யானைக்கும் அடிசறுக்கும்

**(அல்லது)**

ஆ) சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்

42) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

செவியறிவுறூஉத் துறையைச் சான்றுடன் விளக்குக.

43) **ஆங்கிலப் பழமொழிகளுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.**

அ) An artist lives every where
ஆ) Work is worship
இ) A new language is new life
ஈ) One flower makes a garland.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.** **3x6=18**

44) அறிவுடைமை வாழ்வின் உயர்விற்குத் துணை நிற்கும் என்பதனை வள்ளுவம் வழிநின்று விளக்குக.

**(அல்லது)**

தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி. பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

42) பண்டைக் காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கு இடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

'மயிலையார் ஓர் ஆராய்ச்சிப்பேரறிஞர்' - விளக்குக.

46) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப் பற்று ஆகியவற்றை விவரிக்க.

**(அல்லது)**

உங்கள் பகுதியில் வாழ்ந்து வரும் கலைஞர் ஒருவரை நேரில் கண்ட அனுபவத்தை விளக்குக.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** **4+2=6**

47) அ) 'விண்வேறு' எனத் தொடங்கும் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'அரிது' என முடியும் திருக்குறளை அடி பிறழாமல் எழுதுக.

\- - - - - - - -

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net